**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 343/2015**

**நாள்.18.06.2026**

**பி.வா.சா. 3 - கனித்தாய் என்ற கனியம்மாள்**

**1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் எனது தரப்பில் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய விபரங்கள் சொன்னது நான் தான் என்றால் ஆமாம். நான் தற்போது எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் மடத்துப்பட்டி. மடத்துப்பட்டியில் குடியிருக்கிறேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் அப்பா அம்மா பெயர் என்ன என்றால் அப்பா பெயர் கட்டையா தேவர், அம்மா பெயர் தெரியாது. நான், செல்வராஜ், 1 முதல் 6 பிரதிவாதிகள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் நான் மடத்துப்பட்டி, அவர்களுக்கு ஆவரந்தை ஊர். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் எல்கை என்ன என்றால் தெரியாது. கட்டாரித்தேவருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 4, 5 பிரதிவாதிகள் வாரிசுகள் என தெரியும், மற்றவர்கள் பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. கட்டாரித்தேவருக்கு அன்னத்தாய், ராமாத்தாள், மகாராஜன், சீனிவாசன், அன்னராஜ், வள்ளித்தாய் ஆகியோர் 1 முதல் 6 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் தெரியாது சீனிவாசன், அன்னராஜ் வாரிசு என எனக்கு இடத்தை விற்றது தான் தெரியும். கட்டாரித்தேவரின் அப்பா பெயர் என்ன என்றால் தெரியாது. கட்டாரித்தேவரின் உடன்பிறந்தவர்கள் யார் யார் என்றால் தெரியாது. எனது கணவர் பெயர் பொன்னுத்தேவர் என்றால் சரிதான். எனது கணவர் பெயர் பொன்னையா தேவர் என சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் எனது தரப்பில் நீதிமன்றத்தில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் 2008 ல் சீனிவாசன், அன்னராஜா ஆகியோரிடமிருந்து பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் வாங்கினேன் என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.5 ல் 1 முதல் 3 மற்றும் 6 பிரதிவாதிகள் கையொப்பம் போடவில்லை என்றால் ராமாத்தாள் கணவர் சேர்ந்திருந்து பணம் வாங்கிக்கொடுத்து கிரையம் முடித்துக்கொடுத்தார் அவர் பத்திரத்தில் கையொப்பம் போட்டுள்ளார். ராமாத்தாள் கணவர் சொத்துக்கு உரிமையாளர் கிடையாது என்றால் சரிதான். ராமாத்தாள் சொத்துக்கு அவரது கணவருக்கு உரிமை இருந்தால் தான் அவர் கையொப்பம் போட முடியும் என்றால் சரிதான். சீனிவாசன், அன்னராஜாவுக்கு சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தில் கட்டாரித்தேவர் வாரிசுகள் அனைவரும் கையொப்பம் போட வேண்டும் என்றால் சீனிவாசன், அன்னராஜாவுக்கு சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது நான் அவர்களிடமிருந்து வாங்கினேன். பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் சீனிவாசன், அன்னராஜா சுயமாக கிரையம் வாங்கியதாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். சீனிவாசன், அன்னராஜா தவிர்த்து கட்டாரித்தேவரின் இதர வாரிசுகளிடம் நான் கிரையம் வாங்காததால் பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் சீனிவாசன், அன்னராஜா ஆகியோருக்கு எந்த தேதியில் வாய்மொழியாக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் 1, 2, 3, 6 பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 பட்டா இதுவரை கட்டாரித்தேவரின் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. கட்டாரித்தேவருக்கும், பாலுத்தேவருக்கும் இடையே எப்போது வாய்மொழி பாகம் நடைபெற்றது என நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் இடையே எப்போது வாய்மொழி பாகம் நடைபெற்றது என நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் இடையே எப்போது யார் முன்னிலையில் வாய்மொழி பாகம் நடைபெற்றது என்றால் அது பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 ல் சர்வே எண்கள் இல்லை, பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 ல் சர்வே எண்கள் இல்லை என்றால் சர்வே நம்பர் வாங்கவில்லை.

பொன்னையா தேவர் எனது கணவர் கிடையாது என்றால் சரியல்ல பொன்னையா தேவர் என்றும் கூப்பிடுவார்கள், பொன்னுத்தேவர் என்றும் கூப்பிடுவார்கள். பொன்னையா தேவர் மற்றும் பொன்னுத்தேவர் என்பவர் ஒரே நபர் என சான்றிதழ் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.8 மற்றும் 9 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து நான் அனுபவித்து வருவதை காட்டக்கூடிய தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தீர்வை ரசீது நான் வாங்கவில்லை பயிர்போட்டு நான் தான் அனுபவித்து வருகிறேன். பயிர் எடுப்பு அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாழை, மக்காச்சோளம், கரும்பு பயிர் செய்து வருகிறோம். நான் தபசில் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பியது எந்த ஆண்டு, மாதம், தேதி என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது எனக்கு படிப்பறிவு இல்லை. கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பவில்லை, நான் தபசில் சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. சொட்டுநீர் அமைக்க கரண்ட் எடுத்ததற்கோ, குழாய் அமைத்ததற்கோ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி பாண்டி என்பவருக்கு அவருக்கு விடப்பட்ட சொத்தை விற்றுவிட்டதாக நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் அந்த வீட்டின் சர்வே எண், தீர்வை ரசீது ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் கேள்விப்பட்டதை தான் சொன்னேன் நேரடியாக தெரியாது. எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள், நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் நான் இடத்தை வாங்கியது எனக்கு தெரியும் மற்றது தெரியாது. செல்வராஜ் வீட்டை திருத்தி வாங்கியதாக சொல்லியுள்ளேன், அந்த வீட்டின் சர்வே எண், தீர்வை ரசீது ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. எனக்கு கிரையம் வாங்கிய இடத்தை தவிர மற்ற சங்கதிகள் தெரியாது என்றால் சரிதான்.

3 வது பிரதிவாதி ஒரு நாள் தாவா சொத்திற்கு இடத்தை பார்க்க வந்தார் அப்போது நான் தபசில் சொத்தில் நின்றேன், மேற்படி இடம் குறித்து 4, 5 பிரதிவாதிகளிடம் கேட்டபோது அவர்கள் இடத்தை ஒத்திக்கு கொடுத்திருப்பதாக சொன்னார்கள் நான் கிரையம் வாங்கியதாக சொன்னபிறகே தபசில்சொத்து விற்கப்பட்ட விபரம் 1, 2, 3, 6 பிரதிவாதிகளுக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. நான் கிரையம்பெற்ற 2008 காலகட்டத்தில் 3 வது பிரதிவாதி கேரளாவில் இருந்தார் அதனால் அவருக்கு அந்த விபரம் தெரியாது என்றால் சரியல்ல. 1, 2, 3, 6 பிரதிவாதிகளுக்கு படிப்பறிவு இல்லாததால் அவர்களை ஏமாற்றி கிரையம் பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணம் 1, 2, 3, 6 பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.18 13:24:22 +0530